2010 ஏப்ரல் 6]

நாகர்கோவிலில் தனியாக ஒன்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருக்காது. மூன்றாவது, ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்மனாபபுரம், குழித்துறை போன்ற இடங்களில் எல்லாம் இப்போது நிதி ஒதுக்கி, கட்டடங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதேபோன்று நாகர்கோவிலிலும் கட்ட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது High Court-இனுடைய பரிசீலனையில் இருக்கிறது.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

13—

கட்டட வசதி

*__102833—திரு. த. தியோடர் ரெஜினால்டு:__

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கடந்த 26-10-2007 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தகுந்த இடம் தேர்வு செய்து கருத்துரு அனுப்ப, சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர், துணைப் போக்குவரத்து ஆணையர், திருநெல்வேலி மற்றும் மாவட்ட நிருவாகத்திடம் கோரப்பட்டுள்ளது. தகுந்த இடம் தேர்வு செய்து கருத்துரு வரப்பெற்றவுடன் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

[2010 ஏப்ரல் 6

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்த எனக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் பேசுவதற்கான வாய்ப்பைத் தந்த எங்களுடைய குடும்பத் தலைவர் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய இளைய தலைவர், வருங்கால தமிழகம் துணை முதல்வர் மாண்புமிகு டாக்டர் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டு கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களுக்கு, மார்த்தாண்டத்தில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகமானது உருவாக்கப்பட்டது நம்முடைய தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் அதைத் திறந்து வைத்தார்கள். ஆனால், அது வாடகைக் கட்டடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. 3 கிலோ மீட்டருக்குள், மிக அருகில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான சுமார் 60 சென்ட் இடம் நாகர்கோவில்-திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் காலியாக உள்ளது. அந்த இடத்தில் அரசு அலுவலகங்களை அமைக்க வேண்டுமென்று உள்ளூர் பஞ்சாயத்தும் தீர்மானம் போட்டு அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. போக்குவரத்துத் துறைக்கும் சம்பந்தப்பட்ட கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயைகூர்ந்து--எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அரசு நிலம் கிடைப்பது என்பது மிகவும் கடினமான காரியம்; ஆனால், தேசிய நெடுஞ்சாலையில் மிக வசதியாக இடம் இருக்கிறது; எனவே, அமைச்சர் அவர்கள் தயைகூர்ந்து--என்னுடைய தொகுதியில் உள்ள காட்டாத்துறை கால்நடை மருத்துவமனைக்கு மிக அருகில் உள்ள காலியாக இருக்கின்ற அந்த இடத்தில், அரசு அலுவலகம் அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கால்நடைத் துறைக்குச் சொந்தமான அந்த

2010 ஏப்ரல் 6]

நிலம் உரிய முறைப்படி எங்களுக்கு ஒப்படைக்கப்படுமானால், இந்த ஆண்டே அந்தக் கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சியை நாங்கள் எடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கழக ஆட்சியில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் அதை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். நம்முடைய கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இந்த 4 ஆண்டுக் காலத்தில், D.T.C. அலுவலகங்கள் ஏற்கெனவே இருந்தவை 2; இப்போது கூடுதலாக 2 அலுவலகங்களுக்கும், அதேபோல R.T.O. அலுவலகங்கள் ஏற்கெனவே இருந்தவை 22. அவற்றில், இப்போது 15 புதிய அலுவலகங்களுக்கும், யூனிட் அலுவலகம் ஒரு இடத்தில் இருந்தது; இப்போது 14 அலுவலகங்களுக்கும் எனப் புதிய கட்டடங்களாக, கிட்டத்தட்ட 31 கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டுவது பற்றி ஒரு பிரச்சினையும் இல்லை. இடம் சரியாக இருக்குமானால் இந்த ஆண்டே அது கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிமனை இன்னும் திறந்த நிலையிலேயே இருக்கிறது. அதைத் திறக்கும்போது, 13 பஸ்கள் அங்கே நிறுத்தப்பட்டு இயக்கப்பட்டன. ஆனால், அங்கு எந்தவித அடிப்படை வசதிகளும் செய்யப்படாமல், அந்தப் பகுதியில் இருக்கின்ற 13 பேருந்துகளில் 7 பேருந்துகள்தான் இப்போது அங்கே நிறுத்தப்படுகின்றன. அங்கிருந்து ஒரு புறநகர்ப் பேருந்துகூட இயக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பணிமனை

[2010 ஏப்ரல் 6

திறந்தும் அது செயல்படாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. அது செயல்படுவதற்கான ஆயத்தங்களை மாண்புமிகு அமைச்சர் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே புறநகர்ப் பேருந்துகளை இயக்குவதற்குக் கூடுதலாக அங்கே பேருந்துகளை நிறுத்தி, அங்கேயிருந்து பல ஊர்களுக்குப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மானாமதுரையிலிருந்து பேருந்துகள் இரவு நேரங்களில் பணிமனைக்குச் செல்கின்ற நேரத்தில், மானாமதுரையில் இருக்கின்ற பணிமனையில் நிறுத்தாமல், சிவகங்கைக்குத்தான் இன்னும் கொண்டு செல்கின்றார்கள். மானாமதுரை பணிமனையிலிருந்து சிவகங்கை பணிமனைக்குச் செல்கின்ற தூரம், 20 கிலோ மீட்டருக்கும் மேலாக இருக்கிறது. போவதற்கு 20 கிலோ மீட்டர், வருவதற்கு 20 கிலோ மீட்டர் எனவும் ஆகிறது. ஆக, 40 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டியுள்ளது. அதற்கு டீசலும் செலவாகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மானாமதுரையில் இருக்கின்ற பணிமனையிலேயே பேருந்துகளை நிறுத்தி அங்கேயே இயக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு நான் அளித்த பதில்தான் இதற்கும் சொல்ல முடியும். குறிப்பாக, இந்தியாவிலேயே மிக மிகக் குறைவான கட்டணத்தில் இயக்குகின்ற ஒரே போக்குவரத்துக் கழகம் நம்முடைய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்குத் தேவையான அளவுக்கு நிதியினுடைய பற்றாக்குறை காரணமாகத்தான் ஒவ்வொரு இடத்திலும் அடிப்படை வசதிகளை உடனடியாகச் செய்ய இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் நேற்று சொன்னதுபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கித் தருவார்களேயானால், முழு வீச்சிலே அந்தப் பணி இந்த ஆண்டு தொடங்கி, அனைத்துப் பேருந்துகளும்

2010 ஏப்ரல் 6]

மானாமதுரையிலேயிருந்து இயக்குவதுபோல செய்து தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மானாமதுரையிலிருந்து புறநகர்ப் பேருந்துகள் செல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். உரிய முறையில் அதிகாரிகளுக்கு அது சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக இருந்த திருவெறும்பூர் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகப் போக்குவரத்துப் பிரிவு அலுவலகம் திருவெறும்பூரிலே தொடங்கப்பட்டது. அது எதிர்பார்த்ததை விட மிக அதிக அளவு வருவாய் ஈட்டிக் கொண்டிருக்கின்ற பிரிவு அலுவலகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்போது, அந்தப் பகுதி மக்கள் எல்லாம், பெர்மிட் போன்ற பணிகளுக்காகத் திருச்சிக்குச் செல்ல வேண்டியிருப்பதால், இதை வட்டாரப் போக்குவரத்து அலுவலமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். எல்லா கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு, இந்தப் போக்குவரத்துப் பிரிவு அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்த முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுதான் அது துணை அலுவலகமாக ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அதற்கான இடம் தேவை. சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று 'பெல்' நிறுவனத்திடம் அதற்காக இடமும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்தான் கேட்டு, அந்த இடத்தை வாங்கித் தந்திருக்கிறார்கள். எனவே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துவதற்கு அங்கே வேலைப் பளு இருக்குமானால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் ஆட்சியிலே, அந்த ஆட்சி மகுடத்திலே, மாணிக்கக்கல்லாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், போளூர் தொகுதியிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தருவதாக ஏற்கெனவே வாக்குறுதியளித்தார், அந்த மன்றத்திலே. இதுவரையிலே, அது அமைக்கப்படவில்லை. போளூரிலே இடம் இருக்கிறது. பேரூராட்சிக்குச் சொந்தமான ஒரு ஏக்கர், 65 செண்ட் இடம் அங்கே இருக்கிறது. எனவே, அங்கே ஒரு போக்குவரத்து அலுவலகத்தைத் துவக்கி, புதிய கட்டடமும் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம் Wakf Board-க்குச் சொந்தமான இடம் என்று நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, பணிமனை அமைப்பதற்கு இடம் இருந்தால்தான் பணிமனை அமைக்க முடியுமே தவிர, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களோ, துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களோ ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அங்கு வேலைப் பளு இருக்க வேண்டும், அதிகமான அளவுக்கு வண்டிகள் வந்து பதிவு செய்யப்பட வேண்டும். பேருந்துகள், லாரிகள் எல்லாம் மிக அதிகமான அளவுக்கு அந்தப் பகுதியிலே இயக்கப்படுமானால், நிச்சயமாக அது கவனிக்கப்படும். நம்முடைய மானியக் கோரிக்கையிலே அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.